**அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 7/2003**

எனது இல: தா1/4/3(1)
அரசாங் நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07

2003. 06. 05

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் ,

**சம்பள அளவுத் திட்டமொன்றின் தேக்க நிலை அடைந்துள்ள அலுவலர்களுக்கு வேதனவேற்றங்களை வழங்கல்.**

சம்பள அளவுத் திட்டத்தின் தேக்க நிலையை அடைந்துள்ள அலுவலர்களுக்கு தேக்க நிலையில் தங்கி இருப்பதன் பொருட்டு வேதன ஏற்றங்கள் வழங்குவதற்குரிய 1997.11.12 ஆந் திகதிய 2/97(111) இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 5ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1997.01.15 ஆந் திகதிய 2/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 6ஆம் பிரிவின் 6:1, 6:2 மற்றும் 6:3 ஆம் ஏற்பாடுகளை 1997.01.01 ஆந் திகதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு நீக்குவதற்கும் அதற்குப் பதிலாக இச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை அன்று தொடக்கம் செயற்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

02. 2002.12.31 திகதி வரை நிலுவை சம்பளம் செலுத்தாது 1997.01.01 ஆந் திகதியிலிருந்து தேக்க நிலையை அடைந்துள்ள அலுவலர்களுக்கு தமது பதவிக்கு இயைபுடைய சம்பள அளவுத் திட்டத்தில் இறுதியாக உள்ள பெறுமதிக்கு சமமான வேதனவேற்றங்களை தொடர்ந்தும் ஆண்டுதோறும் உழைத்துப்பெறுவதற்கு இடமளிக்கலாம்.

03. 1997.01.01 திகதிக்கு ஒரு வருடம் அல்லது அதற்குக் கூடிய காலம் உச்சச் சம்பள படிநிலையில் இருந்தவர்களும் வேதனவேற்றமொன்றை பெற்றுக் கொள்ளாதவர்களுமான அலுவலர்களுக்காக ஒரு வேதனவேற்றம் 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் வழங்கப்படுவதுடன், அதன் பின்னர் இந்த அலுவலர்களின் வேதனவேற்றத் திகதியாக அமைவது சனவரி மாதம் 01 ஆந் திகதியாகும். ஒழுக்காற்றுக் கட்டளையொன்றின் பேரில் வேதனவேற்றங்களை இழக்கச் செய்துள்ள அலுவலர்கள் தொடர்பில் இது இயைபாகாததுடன், ஒழுக்காற்று கட்டளைகளின்படி செயற்படுதல் வேண்டும்.

04. 1997.01.01 ஆந் திகதிக்கு ஒருவருடத்தைப் பார்க்க குறைந்த காலம் உச்சச் சம்பளப் படிநிலையில் இருப்பவர்களும், 1997.01.01 திகதிக்குப் பின் அதே வருடத்தினுள் அடுத்த வேதனவேற்றத் திகதி அமைகின்றவர்களுமான அலுவலர்களுக்கு ஒழுக்காற்றுக் கட்டளையொன்றின் பேரில் வேதனவேற்றங்கள் இழக்கச் செய்யப்படாதிருப்பின் 1997 ஆண்டினுள் அமையும் வேதனவேற்றத் திகதியில் ஒரு வேதனவேற்றம் வழங்கப்படுவதுடன் அந்த அலுவலரின் வேதன வேற்றத் திகதி மாறாது இருக்கும்.

05. 1997.01.01 திகதி அல்லது அதற்குப்பின் தற்போது உள்ள சம்பள அளவுத் திட்டங்களின் தேக்கநிலையை அடைகின்ற அலுவலர்களுக்கு தேக்கநிலையை அடைந்த பின் ஒவ்வொரு ஆண்டிற்குமாக இச்சுற்றறிக்கையின் 02ஆம், 03ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் கீழ் வேதனவேற்றங்களை வழங்கலாம்.

06. மேலே 03ஆம், 04ஆம் , 05 ஆம் பந்தியின்படி வேதனவேற்றங்களை பெறுகின்ற அலுவலர் ஒருவர் 1997.01.01 ஆந் திகதி முதல் 2002.12.31 ஆந் திகதி வரையான காலத்தினுள் பதவி உயர்வு பெறப்பட்டிருந்தால் திருத்தப்பட்ட

சம்பளத்தின் பேரில் சம்பளத்தை மீளமைக்க வேண்டியதுடன், 2003.01.01 ஆந் திகதியில் இருந்தே நிலுவை சம்பளம் செலுத்த வேண்டும். இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்த முன்னராக இருந்த ஏற்பாடுகளின் பேரில் மேற்கொள்ளப்படும் சம்பள மீளமைப்புகளின் கீழ் பதவி உயர்வுகள் செயற்படும் திகதியில் இருந்து நிலுவை சம்பளம் செலுத்த தடையொன்றும் இல்லை.

07. 1997.01.01 திகதி தொடக்கம் 2002.12.31 திகதி வரையிலான காலத்திற்குள் தேக்கநிலை சம்பளம் பெற்றுக் கொண்டிருந்து, 60 வயது பூர்த்தியாகி ஓய்வுபெற்றுள்ள அலுவலர்களின் ஓய்வூதியம் அவர்கள் இறுதித் தடவையாக வேதனவேற்றத்தை பெற்ற திகதியிலிருந்து ஓய்வுபெறல் வரையிலான காலத்திற்கு உழைத்துப் பெற்றுள்ள வேதனவேற்றத்தின் விகிதாசார பங்கோடு கணிப்பீடு செய்து திருத்தப்படவேண்டியதுடன், நிலுவை ஓய்வூதியத்தை 2003.01.01 ஆந் திகதி தொடக்கம் மட்டும் செலுத்த வேண்டும். இச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் செயற்பட முன்னிருந்த ஏற்பாடுகளின்கீழ் ஓய்வுபெற்ற திகதியில் இருந்து ஓய்வூதியத்தை பெறுவதில் தடைஇல்லை.

08. மேற்படி ஏற்பாடுகளுக்கு புறம்பாக 1997.01.01 திகதிக்கு முன் தேக்க நிலையில் தங்கியிருந்த ஒவ்வொரு ஆண்டிற்காகவும் வேதனவேற்றங்களை வழங்க இயலாது என்பதை விசேட கவனத்திற் எடுத்துக் கொள்ள வேண்டியதுடன் சிலவேளை 1 வருடம் தொடக்கம் 3 வரையிலான காலத்திற்கு ஒரு வேதனவேற்றத்தை மட்டும் பெறலாம்.

**உதாரணம்** :-

1. 1994.01.01 ஆந் திகதி தேக்க நிலையை அடைந்த அலுவலருக்குப் போன்று 1996.01.01 திகதி தேக்க நிலையை அடைந்த அலுவலருக்கும் 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் ஒரு வேதனவேற்றம் மட்டும் கிடைப்பதுடன் அது ஒரு முரண்பாடாக கருதப்படமாட்டாது.

11. 1993.01.01 திகதி சம்பள அளவுத் திட்டத்தில் தேக்க நிலையை அடைவதால் 1996.01.01 திகதி கருதுகின்ற அடிப்படையில் ஒரு வேதனவேற்றம் வழங்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு இச் சுற்றறிக்கையின் கீழ் 1997.01.01 திகதி தொடக்கம் ஒரு வேதனவேற்றத்தை வழங்கலாம்.

09. பதவிஉயர்வொன்றை பெறுகின்ற அலுவலரொருவர் பதவிஉயர்வு செயற்படும் திகதியில் புதிய பதவிக்கு இயைபுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்ச சம்பள படிநிலையை கடந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தால் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின்படி சம்பளத்தை மீளமைப்பதற்காக சொல்லப்பட்ட சம்பள அளவுத் திட்டத்துடன் (உயர்வுபெற்ற பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ) வேதனவேற்றங்களை சேர்த்து சீராக்க வேண்டும்.

10. ஒரு பதவியில் உச்ச சம்பளப் படிநிலையை கடந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கின்ற அலுவலரொருவர் பதவி உயர்வொன்றின் பேரில் மேற்கொள்ளப்படும் சம்பள மீளமைப்பின் கீழேனும் அப் பதவியின் உச்ச சம்பள படிநிலையை அடைவாராயின் அதன் பின்னர் உயர்வுபெற்ற பதவியில் ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த பின்னரே வேதனவேற்றங்களை பெறுவதற்காக தகைமையடைவதுடன் இரண்டு பதவிகளில் தேக்க நிலை அடைந்திருந்த காலப்பகுதிகளை ஒன்றிணைத்து வேதனவேற்றங்களை பெற்றுக் கொள்ள இயலாது.

11. இச்சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பேரில் 1997.01.01 ஆந் திகதியில் இருந்து இயைபுடைய சம்பளப் படிநிலைகளில் அமர்த்த முடிந்தாலும் 2002.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக நிலுவை சம்பளம் செலுத்தப்படமாட்டாது.

12. இற்றை வரை இருந்த ஏற்பாடுகளின் பேரில் 1997.01.01 ஆந் திகதிக்கு பின் தேக்கநிலையில் தங்கி இருந்தமைக்காக செலுத்தியுள்ள வேதனவேற்றங்களுக்குப் பதிலாக இச்சுற்றறிக்கை ஏற்பாடுகள் பதிலீடு செய்யப்படுவதால் ஒரே திகதிக்கு வேதனவேற்றங்கள் இரண்டை வழங்குதலாகாது.

13. இவ் வேதனவேற்றங்களை வழங்கும் போது தாபன விதிக்கோவையின் VII அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவில் விதித்துரைத்துள்ள ஏற்பாடுகள் இயைபு ஆதல் வேண்டும்.

14. இதற்காக மேலதிக ஒதுக்கீடுக் வழங்கப்படாததுடன் இருக்கின்ற ஒதுக்கீடுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

15. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ **பி.ஜி.கருணாரட்ன.**
தாபனப் பணிப்பாளர் நாயகம்.